1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 3 ஆண்டுகளுக்கு தள்ளிவைக்கிற உத்தரவு 5-12-1978 ஆம் ஆண்டிலே இடப் பட்டிருக்கிறது. எனவே 1981 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 3 ஆண்டுக்கால அளவு இருக்கிறது. அதற்குப் பிறகு நீரின் அளவு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். அப்படித் தெரிந்ததற்குப் பிறகு நீரியல் அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

* வினா எண் 116— திரு. இல. பலராமன்: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக் காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஆ) அத்திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) பாலாற்றின் உபரிநீர் குறைந்து இருப்பதாலும், ஆந்திர மாநிலத்திலுள்ள நிலங்கள் நீர்ப்பிடிப்பில் மூழ்க வாய்ப்பி ருப்பதால் அம்மாநிலம் ஆட்சேபணை தெரிவித்ததின்பேரிலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, பாலாறு தமிழ் நாட்டிலே ஒரு முக்கியமான ஆறு என்பதை நாம் அறிவோம். என்றைக்குமே வறட்சியாக இருப்பதைப் போக்குவதற்காக கர்நாடக மாநிலத்திலுள்ள கேத்தமங்கலம் ஏரியிலிருந்து நீர் திறந்து விடுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடக்கக்கூடிய சூழ்நிலை அரசுக்கு இருக்கிறதா அல்லது திட்டம் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக்கேள்வி 'வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணைகட்டும் திட்டம்' என்பதுபற்றி. அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்போது கேட்ட கேள்வியை தனியாகப் போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த புல்லூருக்கு கீழேயும் வாணியம்பாடிக்கு அருகிலும் ஆந்திர மாநிலத்திலே நீர்த்தேக்கம் பிடிக்காமல் இருப்பதால் அணைகட்டுவதற்கு சாத்தியக்கூறு இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது. அதைப் பற்றி பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நாம் அறிவித்திருக்கிற புல்லூர் அணைக்கட்டு திட்டத்தின்படி ஆந்திர மாநிலத்தில் சித்தூர் தாலுகாவில் பெடவங்கா கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் இன்னும் அதற்குக் கூடுதலாகவே நீரில் மூழ்கியிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

[முற்பகல் 10-00]

எனவே அந்த அரசு இதை ஆட்சேபித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப்போல அதற்குக் கீழே புதிய இடத்திலே கட்டக்கூடிய 5 கிலோ மீட்டருக்குத் தள்ளி ஒரு புதிய இடத்திலே கட்ட வேண்டுமென்று சொன்னால் அணையினுடைய கொள்ளளவு கிட்டத்தட்ட ஆறிலே ஒரு பங்கு என்று வந்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையின் முன் அமைதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: முதலிலே புல்லூர் அணைத் திட்டப்படி அணையினுடைய கொள்ளளவு 1,680 மில்லியன் கன அடியாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையையும் நாம் பரிசீலனை செய்தோம். அங்கே புதிதாகக் கட்டக்கூடிய அணையின் கொள்ளளவு 200 முதல் 250 மில்லியன் கனஅடிதான் வருகிறது. அதனால் எந்தவிதமான நன்மையும் அதிகமாக ஏற்படவில்லை என்கின்ற காரணத்தால்தான இந்தத் திட்டத்தை நாம் இப்பொழுது கைவிட்டிருக்கிறோம்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புல்லூர் பகுதியிலேயிருந்து, பாலாற்றங்கரை பகுதியிலேயிருந்து திருப்பத்தூர் நகரத்திற்கும், ஜோலார்பேட்டை இரயில்வே நிலையத்திற்கும் குடிதண்ணீரை எடுத்துச் செல்வதால் அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு மிகவும் மோசமான நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் குறையை நீக்குகின்ற அளவில் அந்தப் பகுதியில் நீர்த்தேக்கம் கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, அதைத்தான் ஏற்கனவே நான் பதிலிலே சொல்லியிருக்கிறேன். புல்லூர் அணைத் திட்டத்தை நாம் நிறைவேற்றமுடியாது, ஆந்திர மாநில அரசு அதை ஆட்சேபிக்கிறது. புதிதாகக் கட்டலாம் என்று சொன்னால் 200 முதல் 250 மில்லியன் கன அடிதான் அணையினுடைய கொள்ளளவு இருக்கும். அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றுகின்றபொழுது ஏற்கனவே வளமான பகுதிகள் நீரிலே மூழ்கிவிடுவதற்கான ஆபத்தும் இருக்கிறது. அங்கே எந்த வகையிலேயும் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று அறிக்கை கூறுகிறது.